# பெ.சண்முகத்தின் உண்மை முகம் - 2

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் எழுதி இருக்கும் கட்டுரையில் சகிக்க முடியாதது, 'சி.பி.எம். முன்னால் இருந்த மூன்று வாய்ப்புகள்' என்ற பகுதி ஆகும்.

★ த.வெ.க. ஆட்சி அமைக்க ஆதரவு கடிதம் கொடுத்த நிலையில் ஆதரிப்பது.

★ தி.மு.க. ஆதரவுடன் அ.தி.மு.க. ஆட்சி அமைப்பதற்கு ஆதரவு அளிப்பது.

★ யாரும் ஆட்சி அமைக்கவில்லை என்றால் குடியரசுத் தலைவர் ஆட்சி அமையும் நிலை.

இதுதான் அவர் முன்னால் இருக்கும் வாய்ப்புகளாம்.

ஒரு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி யாரை ஆதரிப்பது என்பதற்கு இப்படி மொன்னையான அளவுகோல்கள் மட்டும்தான் உண்டா? சிவப்புத் துண்டு போட்டிருப்பதால் கொள்கைப்பூர்வமாகவே கேட்போம்.

**★ ஒரு கம்யூனிஸ்ட் கட்சி எந்த வர்க்கத்தை ஆதரிப்பது?**

**★ ஆட்சி அதிகாரத்தைப் பெறப் போகும் அரசியல் சக்தியை பின்னால் இருந்து இயக்குபவர்கள் யார்?**

**★ நாம் எடுக்கும் நிலைப்பாட்டின் மூலமாக பலனடையப் போகும் சக்தி யார்?**

இது தானே ஒரு கம்யூனிஸ்ட் கட்சியின் நிலைப்பாடாக இருக்க முடியும் என்று அப்பாவி மார்க்சிஸ்ட் நினைப்பார்! ஆனால் சண்முகத்துக்கு அப்படி எந்தச் சிந்தனையும் இல்லை.

ஆதரவுக் கடிதம் யார் அனுப்பினாலும் ஆதரித்து விடுவார்களா?

த.வெ.க. ஆட்சிக்கு ஆதரவு என்ற நிலைப்பாட்டை தயக்கம் இல்லாமல் ஒரு கம்யூனிஸ்ட் கட்சி எப்படி எடுக்க முடியும்? அவர்கள் யார் என்று சண்முகத்துக்கு தெரியாதா? யாரால், எத்தகைய சக்திகளால் சூழப்பட்டவர் விஜய் என்பது சி.பி.எம்.க்குத் தெரியாதா?

எத்தகைய ஆட்சியை ஆதரித்துள்ளீர்கள்? கடந்த ஏப்ரல் மாதம் முழுக்க வெளியான 'தீக்கதிர்' நாளிதழை திருப்பிப் பார்த்தாலே தெரியுமே விஜய் யார் என்று?

★ 'ஏலம் போடும் ஜனநாயகம் லாட்டரி மாஃபியாவும் கார்ப்பரேட் நிழலில் ஆடும் கட்சிகளும்' என்ற கட்டுரையில் மார்ட்டின் குடும்பத்தின் ஊடுருவல் ஜனநாயகத்தின் மீதான நேரடி தாக்குதல் என்றும், லாட்டரி பணத்தை அரசியல் அதிகாரத்தைப் பிடிக்கப் பயன்படுத்துவது வரலாற்று முரண் என்றும் எழுதியது 'தீக்கதிர்'.( ஏப்ரல் 1) த.வெ.க.வின் அடித்தளமே வரி ஏய்ப்பு புகார்கள் மற்றும் கிரிமினல் வழக்குகளில் ஆடிக் கொண்டிருக்கிறது என்று எழுதி இருக்கிறது 'தீக்கதிர்'.

**ப.திருமாவேலன்**

★ தூய சக்தி வேட்பாளர்களின் தீய பின்னணிகள் (3.4.2026)

★ விஜய்யின் லாஜிக் இல்லாத மேஜிக் ஷோ (4.4.2026)

★ 'நெல்லையில் விஜய்யின் சாரமில்லா பிரச்சாரம்' கட்டுரையில் அவரது மதச்சார்பு முகம் கிழித்தெறியப்பட்டது.(9.4.2026)

★ மக்களின் வாக்குகளை பிரிப்பதற்காகவே இத்தகைய கட்சிகள் களமிறக்கப்படுகின்றன என்று விஜய் கட்சி மீது பாய்ந்தார் பெ. சண்முகம் (9.4.2026)

★ 'இது மக்களுக்கான இயக்கமோ மாற்று அரசியலோ அல்ல. சிறுபான்மையினரின் வாக்குகளை சிதைப்பதற்காக பின்னப்பட்ட நுணுக்கமான சூழ்ச்சி வலை' என்று ஏ.ஆர்.பாஷாவின் விரிவான பேட்டியை, 'தவெகவின் போலி முகத்திரை' என்ற தலைப்பிட்டு தீக்கதிர் வெளியிட்டுள்ளது. 15.4.2026)

★ துப்பாக்கி, பீட்ஸ், ஜனநாயகன் இஸ்லாமியர்களைத் தீவிரவாதிகளாக சித்தரிக்கும் விஜய்யின் சந்தர்ப்பவாதங்கள் (15.4.2026)

★ காகிதப் பூக்களில் நிதர்சன அரசியலும் (17.4.2026)

★ இது திரைப்படமல்ல மிஸ்டர் விஜய் (18.4.2026)

★ வெள்ளி பர்தாவும் வெற்று வாக்குறுதிகளும் (20.4.2026)

இப்படி எத்தனையோ செய்திகள் 'தீக்கதிரி'ல் இருக்கிறது. இத்தகைய ஆட்சியைத் தான் கண்ணை மூடிக் கொண்டு ஆதரித்துள்ளார் சண்முகம்.



**கடந்த காலத்தை மறந்திருக்க மாட்டார் பெ. சண்முகம். வாச்சாத்தி மக்களுக்காக உண்மையாக உழைத்த மாபெரும் தியாகம் அவருடையது. அவர் அன்று அந்தப் பிரச்சினையைக் கையில் எடுக்கவில்லை என்றால் அந்த அப்பாவி மக்களுக்கு இன்று நீதி கிடைத்திருக்காது என்பது யாராலும் மறைக்க முடியாத மாபெரும் உண்மை ஆகும்.**

34 ஆண்டுகளுக்கு முன் ஜெயலலிதா ஆட்சி காலத்தில் சித்தேரி மலையில் சிதைக்கப்பட்டார்கள் பெண்கள். இது பற்றி மார்க்சிஸ்ட் தலைவர் நல்லசிவன் அவர்கள் சட்டமன்றத்தில் கேட்ட போது, 'வயதான நீங்கள் அந்த மலைக்கு எப்படி போய் பார்த்தீர்கள்?' என்று கேட்டவர்தான் இன்று சண்முகம் ஆதரிக்கும் ஆட்சியின் மையப்புள்ளியான செங்கோட்டையன். 'அது மலைக்கிராமம் அல்ல, மலையடிவாரத்தில் இருக்கும் கிராமம் ' என்று செங்கோட்டையன் மண்டையில் அன்றே கொட்டினார் நல்லசிவன்.

பாதிக்கப்பட்ட பெண்கள் கோவை சி.பி.ஐ. நீதிமன்றத்துக்கு அடையாள அணிவகுப்புக்காக வந்த போது அவர்களை மிரட்ட பயணிகள் விடுதியில் தங்கி இருந்தவர் தான் செங்கோட்டையன்.

**'என்னையும் அரூர் அண்ணாமலையையும் ஆக்சிடெண்ட் ஆக்கி கதையை முடிங்கப்பா என்று செங்கோட்டையன் சொன்னார்'** என்று பெ.சண்முகம் சமீபத்தில் கம்பீரமான பேட்டியே கொடுத்தார். அப்படி துணிச்சலாக வாச்சாத்தி பெண்களின் உரிமையை நிலைநாட்டிய சண்முகம், செங்கோட்டையன் அமைச்சர் ஆக ஆதரித்ததுதான் 2026 தேர்தலின் புதிய சூழ்நிலை ஆகும். இருவரும் கைகோத்து நடந்து போனது கண்கொள்ளாக் காட்சியாகும். பெ.சண்முகமும் செங்கோட்டையனும் ஒரே நேர்கோட்டுக்கு வந்துள்ளது தான் இன்றைய புதிய அரசியல் சூழ்நிலை ஆகும்.

**விஜய் மத ரீதியாக தேர்தல் பரப்புரை செய்தபோது அவர் மீது தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொன்னவர் பெ.சண்முகம். விஜய் மீது வருமான வரி வழக்கு வந்த போது, 'அவர் மீது கிரிமினல் வழக்கு பதிய வேண்டும்' என்று சொன்னவரும் அவரே. இதையெல்லாம் அவர் மறந்திருக்கலாம். உண்மையான மார்க்சிஸ்ட்டுகள் மறந்திருக்க மாட்டார்கள்.**

குறைந்தபட்சம் த.வெ.க. ஆட்சியை ஆதரிக்க, வெளிப்படையான உறுதிமொழிகளைக் கேட்டுப் பெற்றாரா சண்முகம்? மேடைப் பேச்சுகள் அல்ல, எழுத்துப்பூர்வமான உறுதிமொழிகள் வாங்கப்பட்டதா? இவை எதுமில்லாமல் த.வெ.க. ஆட்சியை ஆதரிக்க என்ன நெருக்கடி அவருக்கு? திராவிட இயக்க வெறுப்பு மட்டும் தான்.

**அப்படியானால் அந்த உண்மையான நோக்கத்தைச் சொல்லி அரசியல் நடத்துங்கள். ஜனாதிபதி ஆட்சி வந்துவிடும் என்று சொல்லி 'கரூர் பலிபீட' வெகுஜன விரோதி ஆட்சியை ஆதரிக்கத் தேவையில்லை.**

**தொடரும்**

# சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பேட்டி... முதல் பக்கத் தொடர்ச்சி

ஒவ்வொரு நாளும் வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துக்கொண்டே இருக்கின்றன. ஒரே நாளில் 24 சம்பவங்கள் நடந்திருக்கின்றன, அதற்கெல்லாம் எந்தவிதமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் சொல்லப்போனால், அவர்கள் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களே அனைத்துக் குற்றங்களிலும் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதற்கான ஆதாரத்தை, நான் இன்று உங்களிடம் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறேன். நேற்று சபாநாயகர், 'ஆதாரத்தைத் கொடுங்கள்' என்றார்கள், ஆதாரம் கையில் வைத்திருக்கிறேன், ஆதாரத்தை உங்களிடம் கொடுக்கிறேன். ஆனால் நான் வைத்த குற்றச்சாட்டுக்கு முதலமைச்சர் பதில் சொல்லவில்லை.

'எங்கள் தயவில்தான் ஆட்சி நடக்கிறது என்று சும்மா சும்மா சொல்லாதீர்கள், நாங்கள் எந்தத் தயவிலும் இல்லை' என்கிறார்கள். அப்படி இல்லை என்றால் ஏன், ஆட்சி அமைந்த உடனே சென்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஒரு பிரிவை மட்டும் இவர் சென்று பார்த்தார்? முதலில் சோபா சென்றது, சோபாவிற்குப் பின்னால் இவர் சென்றார். ஒவ்வொரு கட்சித் தலைவர்களிடமும் போகும்போதும் புதிய சோபா சென்றது, அதையெல்லாம் நீங்கள் பார்த்தீர்கள்.

### அமைச்சர் அறையிலேயே கட்சியில் இணைகிறார்கள்

இப்போது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி அமைந்ததிலிருந்து இன்று வரைக்கும் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரையும், அதுவும் அங்கே கட்சி அலுவலகத்தில் கூடக் கிடையாது, இங்கே சட்டமன்ற வளாகத்திலேயே சென்று அமைச்சரின் அறைகளிலேயே சென்று கட்சியில் சேர்ந்து கொண்டிருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு, அமைச்சர் அறையிலேயே சென்று கட்சியில் சேர்ந்து கொள்கிறார்கள்.

'பீரோ புல்லிங்' மாதிரி இன்று அ.தி.மு.க எம்.எல்.ஏக்களை, இன்றைக்கு இருக்கக் கூடிய அரசு ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினராக இழுத்துக் கொண்டிருக்கிறார்கள். இதையெல்லாம் கேட்டதற்குத்தான் எந்தவிதமான பதிலும் இல்லாமல், ஒரு சூட்டிங் ஸ்பாட்டுக்கு ஒருவர் வந்தால் எப்படி இருப்பாரோ, டயலாக்கை முழுமையாக மனப்பாடம் செய்து வந்து எப்படிப் பேசி நடித்துவிட்டுப் போவாரோ, அதுமாதிரி இன்று முதலமைச்சரின் இந்த உரை அமைந்திருக்கிறது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இவ்வாறு அவர் பேட்டி அளித்தார். தொடர்ந்து

## சட்டப்பேரவையில் விசில் அடிக்க ஆரம்பித்து விட்டார்கள்!

செய்தியாளர்கள் கேள்விக்கு பதிலளித்தார்.

**செய்தியாளர்** : *முதலமைச்சர் ஒரு குட்டி ஸ்டோரி சொல்கிறேன் என்று சொல்லி, சட்டப்பேரவையில் சொல்கிறார். அதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?*

**எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின்:** அவருடைய ஆடியோ வெளியீட்டு விழா, ட்ரைலர் வெளியீட்டு விழாவில் எல்லாம் இது தான் அவருடைய பாணி. அதைத்தான் இங்கேயும் அவர் கடைப்பிடிக்கிறார், இன்னும் சொல்லப்போனால் சட்டமன்றத்தை கிட்டத்தட்ட ஒரு சினிமா தியேட்டர் மாதிரி ஆக்கிவிட்டார்கள். இன்று விசில் எல்லாம் அடிக்க ஆரம்பித்துவிட்டார்கள், இவையெல்லாம் இந்த சபையே பார்க்காதது. விசில் அடிக்க ஆரம்பித்து விட்டார்கள். இன்னும் நம்முடைய அமைச்சர்களெல்லாம் டான்ஸெல்லாம் ஆட ஆரம்பித்துவிடுவார் என்று நினைக்கிறேன், 'ஐட்டம் சாங்' எல்லாம் போடுவார்கள் என்று நினைக்கிறேன்.

### அமைச்சர்களெல்லாம் டான்ஸ் ஆட ஆரம்பித்து விடுவார்கள்!

**செய்தியாளர்** : *மக்களுக்கு நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?*

**உதயநிதி ஸ்டாலின் :** இது முழுக்க முழுக்க அவர்கள் சோசியல் மீடியாவில் ட்ரெண்ட் ஆக வேண்டும் என்று, ரீல்ஸாகப் போக வேண்டும் என்று செய்கிறார்கள். இன்று முதலமைச்சரின் பேச்சை நீங்கள் எடுத்துப் பார்த்தீர்கள் என்றால், கிட்டத்தட்ட அரை மணி நேரம் பேசியிருக்கிறார் என்றால், அதில் பத்து ரீல்ஸ் தேறும். அதைத் திட்டமிட்டுத்தான் செய்கிறார்கள். இது நாங்கள் எதிர்பார்த்ததுதான், ஓர் அளவுக்கு மேல் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. மிகவும் செயற்கையாகப் பேசுகிறார். இங்கேயும் நடிக்க ஆரம்பித்துவிட்டார், சைகை எல்லாம் நடித்துக் காட்டுகிறார்.

இன்னும் சபாநாயகர் (ஸ்பீக்கர்) 'ஆக்ஷன்', 'கட்' அதெல்லாம் இனிமேல் சொல்வார் என்று நினைக்கிறேன், 'ஒன்ஸ்மோர்' எல்லாம் போவார்கள் என்று நினைக்கிறேன். சபாநாயகரிடமும் நான் ஆக்ஷன் பண்ணலாமா என்று கேட்கிறார். சபாநாயகர் ஆக்ஷன் என்கிறார். இனிமேல் முதலமைச்சருக்கு இங்கே முழு கேரவனும் வந்துவிடும் என்று நினைக்கிறேன்; 'கேரவன்', 'மேக்கப்', 'ஸ்டண்ட் மாஸ்டர்' எல்லாம் வந்துவிடுவார்கள் என்று நினைக்கிறேன். சட்டமன்றத்தைக் கிட்டத்தட்ட ஒரு படப்பிடிப்புத் தளமாக மாற்றிக் கொண்டிருக்கிறார்.

**செய்தியாளர்:** *கடந்த ஆட்சியில் ஊழல் நடந்ததாகச் சொல்லியிருக்கிறாரே?*

**உதயநிதி ஸ்டாலின் :** ஊழல் செய்திருந்தால், ஆதாரம் இருக்கிறது என்றால், நீதிமன்றத்திற்குச் செல்லுங்கள், நீதிமன்றத்தில் நாங்கள் எதிர்கொள்வதற்குத் தயாராக இருக்கிறோம், சும்மா பொத்தாம் பொதுவாக, பொதுக்கூட்ட மேடையில் பேசுவது மாதிரி, பிரச்சாரக் கூட்டத்தில் பேசுவது மாதிரி சட்டமன்றத்தில் வந்து பேசிக்கொண்டிருக்க முடியாது, அதற்காகத்தான் நாங்கள் பாயிண்ட் ஆஃப் ஆர்டரில் குறுக்கிட்டு பேசினோம். நீங்கள் இஷ்டத்திற்குப் பேசுவீர்கள், நாங்கள் உட்கார்ந்து அவற்றைக் கேட்டுக்கொண்டிருக்க வேண்டுமா?

**செய்தியாளர்** : *பார்ட்டி ஃபண்ட் பற்றி மிகப்பெரிய அமளி நடந்திருக்கிறது. 'பார்ட்டி ஃபண்ட் பற்றி உங்களுடைய கருத்து என்ன சார்?*

**உதயநிதி ஸ்டாலின்** : எந்த பார்ட்டி? யார் யாருக்குக் கொடுத்தார்கள்? ஏதாவது ஆதாரம் இருக்கிறதா? இப்படி ஒரு குற்றச்சாட்டைச் சொல்லும்போது, ஆதாரம் இருந்தால் அதற்கு நாம் பதில் சொல்லலாம்.

**செய்தியாளர்** : *அ.தி.மு.கவும் அமைதியாக இருக்கிறார்களே?*

**உதயநிதி ஸ்டாலின்** : அதை நீங்கள் அ.தி.மு.க.விடம் தான் கேட்க வேண்டும்.

**செய்தியாளர்** : *ஆளுநர் உரையிலும் மக்கள் திட்டத்தைப் பற்றி எதுவும் சொல்லவில்லை, இப்பொழுது முதலமைச்சரின் பதிலுரையிலும் சொல்லவில்லை. இதை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்?*

**உதயநிதி ஸ்டாலின் :** வேலைவாய்ப்பு இல்லாதவர்களுக்கு 4,500 ரூபாய் கொடுப்பேன் என்றார், அதைப்பற்றி எதுவுமே கிடையாது. நான் கேட்டேன், ஆறு மாதம் கழித்துத்தான் கொடுக்க வேண்டும் என்றால் ஆறு மாதம் எடுத்துக்கொள்ளுங்கள். நிதி நிலைமையையெல்லாம் சரிசெய்துவிட்டுக் கொடுங்கள் என்று சொன்னேன். ஆனால், அதைப்பற்றி எந்தவிதமான பதிலும் இல்லை.

மகளிர் உரிமைத்தொகை 2,500 ரூபாய் தருகிறேன் என்றார், அதைப்பற்றி இல்லை. ஆறு கேஸ் சிலிண்டர்கள் என்றார், அதைப் பற்றியும் வாய் திறக்கவில்லை. இதுமாதிரி எந்தத் தேர்தல் வாக்குறுதியைப் பற்றியும் அவர் பேசவே இல்லை.

தி.மு.க ஆட்சியின் திட்டங்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. 1,000 ரூபாய் மகளிர் உரிமைத்தொகை கொடுத்திருக்கிறார். தமிழ்ப் புதல்வன், புதுமைப் பெண் திட்டம் தொடர்ந்து கொண்டிருக்கிறது. வேறு எந்தப் புதிய திட்டத்தையும் அறிவிக்கவில்லை.

### சினிமா ஆட்சியாக நடைபெறுகிறது!

'சிங்கப்பெண்' என்று சொல்லி ஒன்று ஆரம்பித்தார்கள். இப்போது அவர்களும் முதலமைச்சர் பாணியில், ஷூட்டிங் செய்து ரீல்ஸ் எல்லாம் போட ஆரம்பித்துவிட்டார்கள். எனவே இந்த ஆட்சி ஒரு கேலிக்கூத்து ஆட்சியாக, ஒரு சினிமா ஆட்சியாக நடந்து கொண்டிருக்கிறது.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேட்டி அளித்தார்.